# விலைக்கேள்விக்கான கோரல்(IFB - 09)
# கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண கட்டடங்கள் திணைக்கள திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும், இருப்பினும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வியாபார பதிவினை வடமாகாண நிர்வாக எல்லைக்குள் கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும்,04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் வட மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding Data & Contract Data** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது
5. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள்,கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரிகளில் வவுனியா கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குரிய வேலைகளின்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரிகளில் **9.00** மணியிலிருந்து **16.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை
   a. **பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம்,வடக்கு மாகாணம், கண்டி வீதி, வவுனியா. (தொலைபேசி இல: 024-2223394 தொலைநகல் 024-2222284)**
   b. **பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம்,வடக்கு மாகாணம், கிருஷ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல: 021-2285599 தொலைநகல் 021-2285599)**

   **எனும் முகவரிகளில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 02.04.2018முதல் 16.04.2018வரை 9.00 மணியிருந்து 15.00 மணி வரையான** காலப்பகுதியில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி)**17.04.2018ம்** திகதியன்று **மு.ப 10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன்மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில்திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி,யாழ்ப்பாணம் என்னும்** முகவரியில்**09.04.2018** அன்று **மு.ப10.30** மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | பெறுகைக்குழு | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத தொகை | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/B/VA/08 (2018) | செட்டிகுளம் ஆதாரவைத்தியசாலையில் வைத்திய ஆலோசகர் விடுதி நிர்மாணித்தல் | திணைக்களப் பெறுகைக்குழு | 18.68 | 182 நாட்கள் | C6 or C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 187,000.00 | 30.07.2018 வரை |
| NP/B/VA/09 (2018) | வவுனியா கனகராயன்குளம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் நிர்மாணித்தல். | திணைக்களப் பெறுகைக்குழு | 13.27 | 154 நாட்கள் | C6 or C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 133,000.00 | 30.07.2018 வரை |
| NP/B/KI/07(2018) | கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் பெண்கள் விடுதி நிர்மாணித்தல். | திணைக்களப் பெறுகைக்குழு | 10.70 | 140 நாட்கள் | C6 or C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 107,000.00 | 30.07.2018 வரை |
| NP/B/MU/05 (2018) | முல்லைத்தீவு மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் பெண்கள் விடுதி நிர்மாணித்தல். | திணைக்களப் பெறுகைக்குழு | 11.59 | 140 நாட்கள் | C6 or C5 (கட்டடங்கள்) | 5,000.00 | 116,000.00 | 30.07.2018 வரை |

தவிசாளர்
திணைக்களப் பெறுகைக்குழு
கட்டடங்கள் திணைக்களம்
வடமாகாணம்